தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி ஆர்ப்பாட்டம்

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் அலங்காநல்லூர் கேட்டுக்கடையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், வாடிப்பட்டி, திருமங்கலம், மேலூர், உள்ளிட்ட பகுதிகளில் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிர் செய்யப்பட்டிருந்தது, தற்போது 7 ஆயிரம் ஏக்கருக்கும் குறைவாகவே கரும்பு இருக்கிறது. இந்த நிலையில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2,650 வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், கடந்த ஆண்டு விலையைவிட டன் ஒன்றுக்கு ரூ. 100 குறைவு என்றும், நடப்பு பருவ கரும்புக்கு ரூ. 2,750 வழங்க வலியுறுத்தியும் விவசாய சங்கத்தினர் அலங்காநல்லூர் கேட்டுக்கடையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில், உத்தரப்பிரதேச அரசு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3,200 வழங்குகிறது. அதே போல் தமிழ்நாட்டிலும் கரும்பு கொள்முதல் குறைந்தபட்ச விலையை ரூ. 3,200 ஆக அறிவிக்கவேண்டும். உரவிலை உயர்வு, வேலையாட்கள் பற்றாக்குறை, போன்றவற்றால் கரும்பு விவசாயத்தை கைவிட்டுவிட்டு மாற்று விவசாயத்திற்கு விவசாயிகள் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு நடவு செய்த மொத்த கரும்பு பயிரில் 1,200 ஏக்கர் அளவிற்கு தண்ணீரின்றி கருகிவிட்டது. வரும் காலத்தில் கரும்பு விவசாயத்தை மேம்படுத்த கரும்பு கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டும்.

நடப்பு ஆண்டு கருகிய கரும்பு பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை

வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாய சங்கத்தினர் கையில் கருகிய கரும்பு பயிருடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சர்க்கரை ஆலையில் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு அரவைக்கு குறைவான கரும்பே உள்ளன. இந்த நிலையில் இப்பொழுது உள்ள நிர்வாகக்குழு தாற்காலிகப் பணியாளர்களை அதிகமாக வேலைக்கு அமர்த்தியுள்ளது.

இதனால் ரூ.30 லட்சம் கூடுதலாக செலவாகும். ஏற்கனவே அரசு சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் உள்ளபோது இங்கும் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது என்று தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தலைவர் என்.பழனிச்சாமி பேசினார்.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் பழனிச்சாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் செல்லக்கண்ணு, கதிரேசன், வீரணன், ராமராஜ், ஸ்டாலின்குமார், முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 6300 ஹெக்டேர் நெல், கரும்பு பருத்திக்கு பயிர் காப்பீடு

மதுரை மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் இதுவரை 6,300 ஹெக்டேர் நெல், கரும்பு, பருத்தி பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பூச்சி, நோய் தாக்குதல் மற்றும் அனைத்து விதமான இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் மகசூல் இழப்புகளுக்கு பயிர் காப்பீடு வழங்கப்படுகிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன் பெறும் விவசாயிகள் மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கு காப்பீடு பெறப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் 6,300 ஹெக்டேர் நெல், கரும்பு, பருத்தி ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகபட்சமாக நெல் பயிருக்கு கடன் பெறும் விவசாயிகள் 2,882 பேரும், கடன் பெறாத விவசாயிகள் 3,334 பேரும் காப்பீடு செய்துள்ளனர். கரும்புக்கு 175 ஹெக்டேருக்கு 366 விவசாயிகளும், பருத்திக்கு 188 ஹெக்டேருக்கு 140 விவசாயிகளும் காப்பீடு செய்துள்ளனர்.

பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் டிச.31 வரை காப்பீடு செய்து கொள்ள அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள செய்தி: மதுரை மாவட்டத்தில் நெல் பயிருக்கு 51 குறுவட்டங்களிலும், கரும்புக்கு 30 குறுவட்டங்களிலும் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். சம்பா பருவத்தில் நெல் மற்றும் கரும்பு பயிரிடும், வங்கிக் கடன் பெறும் விவசாயிகளிடம் டிச.31 வரை பயிர் காப்பீடு பெறப்படும். தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளை அணுகி காப்பீடு செய்து கொள்ளலாம். வங்கிக் கடன் பெறும் அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் பிரீமியத்தில் 50 சதவீதம் மானியம் வழங்கப்படும் என்றார்.

## நெல் வயலில் வறட்சியை தாங்கும் பாக்டீரியா தெளிப்பு

திருவாடானை பகுதியில் நெல் வயலில் வறட்சியை தாங்கும் பாக்டீரியா தெளிக்கப்பட்டது. திருவாடானை தாலுகா அளவில் சுமார் 1 லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது கடும் வறட்சி நிலவி வருகிறது. இந்த வறட்சியை சமாளிக்க தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் தமிழ்நாடு வேளாண்மை பல்கழைக்கழக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இயங்கி வரும் ராமநாதபுரம் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையம் மூலம் பி பி எப் எம் எனப்படும் திரவ படிவ பாக்டீரியா திருவாடானை தாலுகா குளத்தூர் கிராமத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க தலைவர் பெரியநாயகம் தலைமையிலும் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கினைப்பாளர் துரைசிங்கம் முன்னிலையிலும் வறட்சியை தாக்கு பிடிக்கும் பாக்டீரியா தெளிக்கப்பட்டது

## பவானிசாகர் அணையின் நீர் மட்டம் 58.70.

பவானிசாகர் அணையின் நீர் மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 58.70 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 906 கன அடி நீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் 1150 கன அடி நீரும், வாய்க்காலில் 2000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 6.8 டி.எம்.சி.

**கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என, அந்த மாவட்ட திமுக வலியுறுத்தியது.

கிருஷ்ணகிரி மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் வெங்கடேசன் தலைமையில் கிருஷ்ணகிரியில் புதன்கிழமை நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் டி.செங்குட்டுவன் எம்எல்ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் நரசிம்மன், மாவட்டப் பொருளாளர் முருகன், ஒசூர் நகர்மன்ற முன்னாள் துணைத் தலைவர் மாதேஸ்வரன், நகரச் செயலாளர்கள் நவாப், விஜயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதிய வாக்குசாவடிகளுக்கு முகவர்களை நியமிப்பது. கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்கள் முழுவதும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் திமுக ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்டு இன்னும் நிறைவேற்றப்படாத புதைக்குழி சாக்கடை திட்டப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகளுக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இரண்டாம் போகத்திற்காக கிருஷ்ணகிரி அணையிலிருந்து வியாழக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி அணையில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, பாசனத்துக்கான தண்ணீரை திறந்து வைத்துப் பேசியது:

கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் தற்பொழுது உள்ள நீர் அளவைக் கொண்டும், எதிர்வரும் பருவ மழையினால் வரும் நீர் வரத்தை எதிர்நோக்கியும் கிருஷ்ணகிரி அணையிலிருந்து வலதுபுறக் கால்வாய் மூலம் விநாடிக்கு 74 கன அடியும், இடது

புறக் கால்வாய் மூலம் விநாடிக்கு 80.71 கன அடி வீதமும் ஆக மொத்தம் 154.71 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன்மூலம், கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள பெரியமுத்தூர், தளி அள்ளி, எர்ரஅள்ளி, நாகோஜனஅள்ளி, மாரிசெட்டிஅள்ளி, கால்வேஅள்ளி, சுண்டேகுப்பம், பெண்ணேஸ்வர மடம், திம்மாபுரம், குண்டலப்பட்டி, காவேரிப்பட்டணம், பையூர், பாலேகுளி, மிட்டஅள்ளி, ஜணப்பரஅள்ளி, சௌட்டஅள்ளி என 16 ஊராட்சிகளில் உள்ள கிராமங்கள் பயன்பெறும்.

தொடர்ந்து 120 நாள்கள் தண்ணீர் திறந்துவிட திட்டமிட்பட்டுள்ள நிலையில், விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என விவசாயிகளை அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.அசோக்குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மனோரஞ்சிதம், கிருஷ்ணமூர்த்தி, வேளாண் இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் ஜகநாதன், கிருஷ்ணகிரி நகர்மன்றத் தலைவர் தங்கமுத்து, தருமபுரி மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் கேசவன், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஜமுனா கிருஷ்ணன், கோவிந்தராஜ், அதிமுக மாவட்ட சிறுபான்மை பிரிவின் பொருளாளர் சாபுதின், தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ராமகவுண்டர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**"கரும்பு தோகையைஇயற்கை உரமாக்கலாம்'**

கரும்பு அறுவடைக்கு பின்னர், கரும்புத் தோகையை வயல்களில் எரிக்காமல், தூளாக்கி மூடாக்கு செய்வதால் மண்ணின் ஈரம் பாதுகாக்கப்படுவதோடு அடுத்த பயிருக்கு சிறந்த இயற்கை உரமாக அமைகிறது என்று வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

தெட்சிணாபுரம் கிராமத்தில் கண்ணன் என்ற விவசாயியின் வயலில் கரும்புத் தோகையை மூடாக்கு செய்வது குறித்த செயல்விளக்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, கே.எம். ஷாஜஹான் பேசியது:

கரும்பு அறுவடை முடிந்தவுடன், டிராக்டரில் இயங்கும் இயந்திரத்தின் உதவியுடன் கரும்பு தோகையினை தூளாக்கி வயல்களில் பரப்பினால் சிறந்த மூடாக்காக செயல்பட்டு, மண்ணில் உள்ள ஈரம் ஆவியாகாமல் தடுக்கப்படும்.

மேலும், தூளாக்கப்பட்ட கரும்பு தோகை விரைவில் மக்கி இயற்கை உரமாக பயிருக்கும் கிடைக்கும். இயற்கை உரங்கள் அரிதாக உள்ள இந்த சூழ்நிலையில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு ஏக்கருக்கு ரூ. 800 மானியமாக வழங்கப்படுகிறது என்றார்.

நிகழ்ச்சியில் திருவரங்குளம் வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவகுமார், வம்பன் தேசிய பயறு வகை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பசுபதி, வேளாண்மை அலுவலர்கள் ஆர்.ஜெகதீஸ்வர், சு. அன்பரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பொங்கல் கரும்பு அறுவடை தொடக்கம்

திருக்காட்டுப்பள்ளி பகுதிகளில் பொங்கல் கரும்பு அறுவடை தொடங்கியுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி, நடுப்படுகை, வளம்பக்குடி, அடஞ்சூர், கூடநாணல், வரகூர், உள்ளிட்ட பகுதிகளில் நிகழாண்டு சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் பொங்கல் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வெளிமாநில கரும்பு வியாபாரிகள் இப்பகுதிகளில் முகாமிட்டு, சில விவசாயிகளிடம் மொத்தமாகக் கொள்முதல் செய்து வருகின்றனர்.

கரும்புகள் வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதியாவது உள்ளூரில் கரும்பின் விலை ஏற்றமாகக் காணப்படும் எனக் கருதப்படுகிறது. இதுகுறித்து நடுப்படுகையைச் சேர்ந்து பொங்கல் கரும்பு பயிரிட்ட விவசாயி ராஜா (40) கூறியது:

கடந்தாண்டைவிட உற்பத்திக் குறைவு. இருந்தும் வியாபாரிகளுக்கு ஒரு கட்டு ரூ. 110 தொடங்கி தரத்துக்கேற்ப 200 வரை விற்பனை செய்து வருகிறோம்.

மேலும் தற்போது பனி அதிகம் விழுவதால், கரும்பின் இனிப்புத் தன்மை குறைய வாய்ப்புள்ளது. பனி அளவு குறையத் தொடங்கும் ஜனவரியில் அறுவடை முழுவதுமாகத் தொடங்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

**"நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் பணம்**

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளின் நெல் மூட்டைகளுக்கு உண்டான பணம் வரும் நாட்களில் வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளதாக நாகை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தார்.

சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலக்தில் வருவாய்த்துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற விரைவு பட்டா வழங்கும் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, 1878 பயனாளிகளுக்கு பட்டாக்களை வழங்கி ஆட்சியர் மேலும் பேசியது:

தமிழக முதல்வர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் விரைவு பட்டா வழங்க உத்தரவிட்டுள்ளார். அதன்படி, சீர்காழி வட்டத்துக்குள்பட்ட பயனாளிகளுக்கு விரைவு பட்டா வழங்கும் முகாமில் 2650 பேர் பட்டா கேட்டு மனு செய்திருந்தனர். அதில் தகுதியுடைய 1878 பயனாளிகளுக்கு விரைவு பட்டா வழங்கப்படுகிறது. நிகழாண்டு விவசாயிகளின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு நாகை மாவட்டத்தில் சம்பா சாகுபடி நெல்லை கொள்முதல் செய்ய 190 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கபட்டுள்ளன. கொள்முதலுக்கு நிலையத்துக்கு கொண்டு வரப்படும் நெல்லின் ஈரப்பதம் 17 சதவீதம் முதல் 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தொகையில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் விவசாயிகளின் நெல் மூட்டைகளுக்கு உண்டான பணம் வரும் நாட்களில் வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் சார் ஆட்சியர் திவ்யதர்ஷினி, வட்டாட்சியர் பி. விஜயன், நிலஅளவை வட்டாட்சியர் அசோகன், ஆணையர்கள் கிருஷ்ணமூர்த்தி, முருகேசன், சந்தானக்கிருஷ்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

பெரம்பலூர் மாவட்டத்தில், கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென, குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தலைமை வகித்தார். மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கமாநிலச் செயலர் ஆர். ராஜாசிதம்பரம் பேசியது:

பசும் பால் மற்றும் எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூ. 3 உயர்த்தியதை, முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். நகரம், கிராமம் என பாரபட்சமின்றி அனைத்து பகுதிகளிலும் ஒரே விலையில் பால் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். செட்டிக்குளத்தில் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் உள்ள வெங்காய குளிர்பதன கிடங்கை திறக்க வேண்டும்.

என். செல்லதுரை: தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் பால் கொள் முதல் விலையை உயர்த்தி வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், மாட்டு தீவனத்திற்கு விலை உயர்வு ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், 50 சத மானியத்தில் தீவனம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் தற்போது பால் உற்பத்தி குறைந்து வருகிறது. இதை தடுக்கவும், பால் உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தவும் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். கோமாரி நோயால் இறந்த கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 25 ஆயிரம் வழங்க வேண்டும்.

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன்:

சின்னமுட்லு, கொட்டரை நீர்த்தேக்க திட்டங்களை விரைந்து நிறைவேற்ற வேண்டும். பருத்திக்கு கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 6 ஆயிரம் உயர்த்தி வழங்க வேண்டும். விவசாயக் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகி ராஜு: பெரம்பலூரில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனையில், வட்டார மருத்துவமனையாக தொடங்கியபோது இருந்த மருத்துவர்களின் எண்ணிக்கையே இன்றளவும் உள்ளது. மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. இதனைக் களைய வேண்டும். தமிழ்நாடு பாமாயில் சங்க தலைவர் முருகேசன்: ஒழங்குமுறை விற்பனை கூடத்தில், விவசாயிகள் தங்களது விளைப்பொருள்களை வைத்து ஏல முறையில் விற்பனை செய்ய, பதிவு செய்ய செல்லும்போது விதிமுறைகளை கூறி சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பதிவு செய்ய மறுக்கின்றனர். எனவே, அனைத்து விவசாயிகளின் விளை பொருள்களை பதிவு செய்யவேண்டும். மேலும், ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை கண்காணிக்கும் வகையில், கண்காணிப்பு குழு அமைக்க வேண்டும்.

கூட்டத்தில், வேளாண் இணை இயக்குநர் அழகிரிசாமி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) இந்திரா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சி. சந்திரசேகரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக் கோரி மறியலில் ஈடுபட முயன்ற விவசாயிகள்**

சிதம்பரம் அருகே கடைமடை பகுதியான அரியகோஷ்டி மற்றும் மானம்பாத்தான் வாய்க்கால் உள்ளிட்ட பாசன வாய்க்கால்களில் தண்ணீர் திறக்க வலியுறுத்தி பி.முட்லூர் எம்ஜிஆர் சிலை அருகே வியாழக்கிழமை மறியல் செய்ய திரண்டனர்.

தகவல் அறிந்த சிதம்பரம் வட்டாட்சியர் எம்.விஜயா, பொதுப்பணித் துறை உதவி செயற் பொறியாளர் ராமமூர்த்தி மற்றும் போலீஸார் சம்பவ இடத்திற்குச் சென்று மறியலில் ஈடுபட வந்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தற்போது ஒரு வாரத்திற்கு பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் திறப்பது என்றும், அதன் பின்னர் மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீர் திறப்பது என அதிகாரிகள் உறுதியளித்தை அடுத்து விவசாயிகள் போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இப்போராட்டத்துக்கு பரங்கிப்பேட்டை ஒன்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலர் எஸ்.ஜி.ரமேஷ்பாபு, தமிழநாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் கோ.மாதவன் ஆகியோர் தலைமையில் விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் பி.கற்பனைச்செல்வம், பரங்கிப்பேட்டை செயலர் கருணைச்செல்வம், சிதம்பரம் வட்டத் தலைவர் ஜீவா, விவசாயிகள் சங்க உறுப்பினர் பரமானந்தம், பரங்கிப்பேட்டை பேரூராட்சி துணைத் தலைவர் நடராஜன் மற்றம் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

**திராட்சை விவசாயிகளின் பிரச்னைகள் தீர்க்கப்படும்**

கர்நாடகத்தில் திராட்சை விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அந்த மாநில தோட்டக்கலைத் துறை அமைச்சர் ஷாமனூர் சிவசங்கரப்பா தெரிவித்தார்.

பெங்களூருவில் வியாழக்கிழமை நடைபெற்ற தேசிய அளவிலான ஒயின் மாநாட்டைத்  தொடக்கிவைத்து அவர் பேசியது:

தேசிய அளவில் திராட்சை விளைச்சலில் 2-ஆவது மாநிலமாக கர்நாடகம் உள்ளது. திராட்சை விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு கடந்த 2007- இல் ஒயின் கொள்கையை மாநில அரசு அமல்படுத்தியது.  இதனால், மாநிலத்தில் ஒயின் தொழில்சாலைகளின் எண்ணிக்கை 17-ஆக உயர்ந்துள்ளது.

இதேபோல, 500 ஏக்கரில் விளைவித்த திராட்சை பயிர்கள் தற்போது 2 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளன.

எனினும், கடந்த ஆண்டு நிலவிய வறட்சி காரணமாக திராட்சை விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

பாகல்கோட்டை, பிஜாப்பூரில் விவசாயிகள் திராட்சையில் குறுகிய கால பயிரை விளைவித்து அதிகம் லாபமடைகின்றனர்.

இதுபோன்ற குறுகிய கால பயிரை மாநிலத்தில் விவசாயிகள் விளைவிக்க வேண்டும். ஒயின் என்றால் போதை திரவம் என பொதுவான கருத்து உள்ளது. இது தவறு. ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் சிகப்பு ஒயினை மீன், இறைச்சி போன்றவற்றில் கலந்து உண்கின்றனர்.

ஒயின் விற்பனையில் கலால் வரி மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவதால், திராட்சை விவசாயிகளும், திராட்சை ரசம் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கர்நாடகத்தில் ஒயினுக்கு கலால் வரி குறைக்கப்பட்டுள்ளது. திராட்சை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையும் அளிக்கப்படுகிறது. ஆனாலும், பல்வேறு காரணங்களால் திராட்சை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு தீர்வு காணும் வகையில், 2 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பல்வேறு தீர்வுகள் குறித்து விவாதம் நடத்தப்படும்.

மாநாட்டில் மாநில தோட்டக்கலைத் துறை முதன்மைச் செயலாளர் சங்கரலிங்கே கெப்டா, ஒயின் வாரிய மேலாண் இயக்குநர் கிருஷ்ணா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

வெங்காயத்திற்கான ஏற்றுமதி விலை 150 டாலராக குறைப்பு

புதுடில்லி: மத்திய அரசு, விவசாயிகளின் நலன் கருதி, ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 150 டாலராக மேலும் குறைத்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன், வெங்காயம் உற்பத்தி குறைந்ததால், உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 100 ரூபாய் வரை சென்றது. இதை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், மத்திய அரசு, 1 டன் வெங்காயம் ஏற்றுமதிக்கான விலையை, 1,150 டாலராக உயர்த்தியது. இதற்கும் குறைவான விலைக்கு, வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. இந்நிலையில் கடந்த
ஒரு சில வாரங்களாக, மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வெங்காயம் உற்பத்தி அதிகரித்து, சந்தைகளுக்கு இதன் வரத்து உயர்ந்து வருகிறது. இதன் காரணமாக, மகாராஷ்டிரா மாநிலம், லசல்கான் மொத்த விலை சந்தையில், ஒரு கிலோ வெங்காயத்தின் விலை, 10 ரூபாய்க்கும் கீழ் சரிவடைந்தது. இதையடுத்து, விவசாயிகளும், வர்த்தகர்களும் போராட்டம் நடத்தினர்.

மத்திய அரசு, இதன் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், கடந்த இரு வாரங்களில், ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 800 டாலர் மற்றும் 350 டாலராக குறைத்தது. இரு தினங்களுக்கு முன், மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார், வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை முற்றிலுமாக நீக்க வேண்டும் என, கோரிக்கை விடுத்திருந்தார். இதை பரிசீலித்த மத்திய வர்த்தக அமைச்சகம், ஏற்றுமதிக்கான, 1 டன் வெங்காயத்தின் விலையை, 150 டாலராக குறைத்துள்ளது.

## காற்றழுத்த தாழ்வு நிலை தமிழகத்தில் மழை உண்டா?

சென்னை: தமிழகத்தில், வடகிழக்கு பருவமழைக் காலம், இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த சில தினங்களாக, சென்னை உட்பட, தமிழகத்தின் பல பகுதிகளில் பனிப்பொழிவு அதிகரித்து

உள்ளது. சமீபத்தில், தென்மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகில், காற்று மேலடுக்கு சுழற்சி நிலை கொண்டிருந்தது. இதனால், தென் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால், குறிப்பிடத்தக்க அளவிற்கு மழை இல்லை. இந்நிலையில், காற்று மேலடுக்கு சுழற்சியானது, நேற்று காலை நிலவரப்படி, கன்னியாகுமரி மற்றும் மாலத்தீவு அருகில் நிலை கொண்டிருந்தது.

இது, அடுத்த, 48 மணி நேரத்தில், மேற்கு நோக்கி நகர்ந்து வலுவிழக்கும் என்றும், இதன் காரணமாக, தென் தமிழகத்தில் சில இடங்களில் மழை இருக்கலாம் என்றும், வானிலை ஆய்வு மைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், தென்மேற்கு வங்கக்கடலில், தமிழக கடற்பகுதியை ஒட்டிய பகுதியில், காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று உருவாகியுள்ளது. இது, அடுத்த, 24 மணி நேரத்திற்கு, அதே இடத்தில் நீடிக்கும். இதனால், சென்னை உட்பட தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், லேசான மழை எதிர்பார்க்கலாம் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மஞ்சளாறு அணை இன்று திறப்பு

சென்னை: தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து, இன்று முதல், பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. மஞ்சளாறு அணையில் இருந்து, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள, பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு, முதல்போக சாகுபடிக்கு, தண்ணீர் திறந்து விட, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று, இன்று முதல், தண்ணீர் திறந்து விட, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள, 5,259 ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறும்.

**நெற்பயிரில் நோய் தாக்குதல்வேளாண் அதிகாரிகள் ஆய்வு**

பெண்ணாடம்:பெண்ணாடம் பகுதியில் நோய் தாக்குதலால் பாதித்த நெல் வயல்களை வேளாண் அதிகாரிகள் பார்வையிட்டனர்.பெண்ணாடம், அரியராவி, பெ.பூவனூர், மாளிகைக்கோட்டம், ஓ.கீரனூர் உள்ளிட்ட பகுதிகளில் 200 ஏக்கருக்கு மேல் ஆந்திரா பொன்னி நடவு செய்யப்பட்டுள்ளது.நெற்பயிர் நன்கு வளர்ந்த நிலையில், கடும் பனி பொழிவு, பாசனத்திற்கு போதிய தண்ணீர் இல்லாததால் கதிர்களில் நெல் மணிகள் பிடிக்காமல் பதராகும் நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.

அதனைச் சுட்டிக்காட்டி "தினமலர்' நாளிதழில் நேற்று செய்தி வெளியானது.அதைத் தொடர்ந்து விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் கார்த்திகேயன், சுப்ரமணியன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் பெண்ணாடம் அடுத்த மாளிகைகோட்டம், அரியராவி பகுதியில் ஆந்திர பொன்னி சாகுபடி செய்துள்ள நெல் வயல்களை நேற்று ஆய்வு செய்தனர்.

பின்னர் பேராசிரியர் சுப்ரமணியன் கூறுகையில், "ஆந்திர பொன்னி (பிபிடி) நெற்பயிரில் பாக்டீரியா இலைக் கருகல் நோய் அதிகளவில் தாக்கியுள்ளன. அதிக பனிப் பொழிவு, மழை காலங்களில் இதுபோன்று தாக்குதல் ஏற்படும்.இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்ஸைடு 500 கிராம் அல்லது ஸ்டெர்ப்டோசைக்லின் 120 கிராம் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04143 - 238231 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தேகங்களைக் கேட்கலாம்' என்றார்.

**மேலூரில் கரும்பு அறுவடை ஆரம்பிச்சாச்சு! விலை "கசக்க' வாய்ப்பு**

மேலூர்:பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மேலூர் பகுதியில் கரும்பு அறுவடை துவங்கியது. கடந்த ஆண்டைவிட இந்தாண்டு விலையை உயர்த்த வியாபாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

மேலூரில் 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் சர்க்கரை மற்றும் வெல்லம் தயாரிக்க

உதவும் ஆலை கரும்புகள் ஆண்டுமுழுவதும் பயிர் செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சீசனில் மட்டும் விற்பனையாகும் செங்கரும்புகள், சூரக்குண்டு உட்பட 20 கிராமங்களில் பயிர் செய்யப்படுகிறது. பொங்கல் விழாவிற்காக, தமிழகம் முழுவதும் மட்டுமின்றி, வெளிமாநிலங்களுக்கும் இங்கிருந்து கரும்புகள் அனுப்பப்படுகின்றன.

இதற்கான வியாபாரிகள் இங்கு முகாமிட்டுள்ளனர். கரும்பின் தரத்தை வைத்து, விவசாயிகளுக்கு முன்தொகை வழங்கியபின் கரும்பை வெட்டி விற்பனைக்கு எடுத்துச் செல்கின்றனர். பயண தூரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்கின்றனர். "கடந்த ஆண்டை காட்டிலும் கரும்பு உற்பத்தி, இந்த ஆண்டு குறைந்துள்ளதால், கரும்பு விலை இந்த ஆண்டு அதிகரித்தே இருக்கும்' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

லாரி டிரைவர் கோவிந்தன்: குஜராத் மாநிலம் பாவ்நகருக்கு கரும்பு கொண்டு செல்ல உள்ளேன். நான்கு நாட்கள் பயணம் செய்து, அங்கு செல்ல லாரி வாடகை ரூ. 50 ஆயிரம். இது, கடந்தஆண்டை விட ரூ.5 ஆயிரம் அதிகம். மேலூர் கரும்பின் ருசி அதிகம் என்பதால், இங்கிருந்து ஏற்றுமதி அதிகம் செய்யப்படுகிறது.

கரும்பு

வெட்டும் இளங்கோவன்: 20 கட்டு கரும்பில் மொத்தம் 300 கரும்புகள் இருக்கும். இதை வெட்டி வண்டியில் ஏற்ற ரூ.4,500 கூலி. கடந்த ஆண்டு கூலியாக ரூ. 5,500 வரை தந்தனர். இந்த ஆண்டு கரும்பு விளைச்சல் மிக குறைவாக உள்ளது. வேலையாட்களுக்கு தகுந்த வேலை கிடைக்காததால், கூலியை குறைத்துக் கொண்டு வேலை பார்க்கும் நிலை உள்ளது. போதிய மழையும் இல்லை; கால்வாயில் தண்ணீரும் இல்லை, என்றார்.

நவரை பருவத்திற்கு நெல் விதைப்பு: புதுச்சத்திரம் பகுதி விவசாயிகள் தீவிரம்

புதுச்சத்திரம்:புதுச்சத்திரம் பகுதியில் நவரை பருவத்திற்கு நெல் விதைப்பு செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

டிசம்பர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை நவரை பருவமாகும். புதுச்சத்திரம் சுற்றுப் பகுதிகளான ஆலப்பாக்கம், தீர்த்தனகிரி, கீழ்பூவானிக்குப்பம், மேட்டுப்பாளையம், தானூர், பூண்டியாங்குப்பம், ஆதிநாராயணபுரம் உள்ளிட்ட

பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், 500க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் ஆண்டுதோறும் நவரை பருவத்திற்கு நேரடி நெல் விதைப்பு செய்து வருகின்றனர். புதுச்சத்திரம் தவிர மற்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் புழுதி உழுது நேரடி நெல் விதைப்பு செய்வர். ஆனால் புதுச்சத்திரம் பகுதியில் உள்ள விவசாயிகள் சேடை உழுது அதில் நேரடி நெல் விதைப்பு (தெளிவு) செய்கின்றனர்.

எனவே இந்த ஆண்டும் டிசம்பர் மாதம் தொடங்கிய உடன் நவரை பருவத்திற்கு நெல் விதைப்பு செய்ய விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகள் தங்கள் நிலங்களில் வளர்த்த பசுந்தாள் உரங்களை தண்ணீர் பாய்ச்சி ஏர் (சேடை) உழுதனர். வயல்களில் கிடக்கும் புற்களை அகற்றி நிலங்களைச் சமன் செய்வர். இதனால் நிலங்களில் மேடு, பள்ளம் இல்லாமல் தண்ணீர் ஒரே சீராக இருக்கும். ஏனென்றால் தெளிவு வைக்கும் போது நிலங்கள் மேடு பள்ளமாக இருந்தால் பள்ளமாக உள்ள இடத்தில் விதைக்கும் நெல் முளைக்காமல் தண்ணீர் தேங்கி வீணாகிவிடும். எனவே இப்பகுதி விவசாயிகள் நிலங்களை சமன் செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதனைத்தொடர்ந்து விவசாயிகள் மண் வெட்டி மூலம் வரப்புகளைச் சுற்றிலும் அண்டை வெட்டுகின்றனர். பின்னர் முதல் நாள் மாலை விதைகளை தண்ணீரில் ஊற வைத்து, மறுநாள் விதைக்கின்றனர். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 12 மரக்கால் வரை நேரடி நெல் விதைப்பு செய்கின்றனர். புதுச்சத்திரம் பகுதியில் தற்போது நவரை பருவத்திற்கு சின்னபொன்னி, 50 ஆகிய இரண்டு வகையான நெல் ரகங்களை நேரடி நெல் விதைப்பு (தெளிவு) செய்கின்றனர். தற்போது, புதுச்சத்திரம் பகுதியில் நவரை பருவத்திற்கு நெல் விதைப்பு செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவண்ணாமலை: நீர் ஆதாரத்தை பெருக்குவதற்காக, ஊரக வேலை திட்டத்தில், பண்ணை குட்டைகள் அமைத்துக் கொள்ளும்படி, விவசாயிகளுக்கு, பி.டி.ஓ., பாலகிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து, கலசப்பாக்கம் பி.டி.ஓ., பாலகிருஷ்ணமூர்த்தி, செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில், நீர் ஆதாரத்தை பெருக்க, பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி, தற்போது நடந்து வருகிறது. நீர் ஆதாரத்தை பெருக்குவதற்காக, விவசாயிகளுக்கு, ஊரக வேலை திட்டத்தின் கீழ், 69 ஆயிரம் மதிப்புக்கு, 15 மீட்டர் நீளம், 1.5 அடி அழத்துக்கு, பண்ணை குட்டைகள் அமைத்து தரப்படுகிறது.

கலசப்பாக்கம் யூனியனில், 66 பண்ணை குட்டைகள் அமைக்க நிர்வாகம் அனுமதி பெறப்பட்டு, குட்டைகள் வெட்டும் பணி முழுமையாக முடிந்தது.

மேலும், 21 பண்ணை குட்டைகள் வெட்டும் பணி துரிதமாக நடக்கிறது. வரும் காலங்களில், விவசாயிகள், பண்ணை குட்டைகளில், மீன் குஞ்சுகள் வளர்த்தல் பணியில் ஈடுபடலாம்.

எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணை குட்டைகளை அமைக்க, சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து அலுவலகங்களில் மனுக்களை அளிக்கலாம். அல்லது வேலை நாட்களில், கலசப்பாக்கம் யூனியன் அலுவலகத்தை அணுகி மனு அளிக்கலாம்.இவ்வாறு கூறினார்.

**பால் வியாபாரிகள் கோரிக்கை வெளி மாநிலங்களுக்கு கறவை மாடு விற்க தடை**

கரூர்: "கறவை மாடுகளை வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது' என, பால் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரூர் தாலுகா பால் வியாபாரிகள் சங்க பொதுக்குழு கூட்டம் கரூர் காவிரி திருமண மண்டபத்தில் நடந்தது. இதில் தலைவர் ராஜாமணி பழனிசாமி தலைமை வகித்தார். செயலாளர் தங்கவேல், பொருளாளர் சதாசிவம் முன்னிலை வகித்தனர். சிறுதொழில்களில் அந்நிய முதலீட்டை தமிழகத்தில் அனுமதிக்க வேண்டாம். உணவுப் பொருள் பாதுகாப்பு தர நிர்ணய சட்டத்தை அமல்படுத்தக்கூடாது. பால் உற்பத்தியை பெருக்க கறவை மாடுகள் வாங்க விவசாயிகளுக்கு மானியம் அளிக்க வேண்டும். மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும். கறவை மாடுகளை அடுத்த மாநிலங்களுக்கு விற்பனை செய்ய தடை விதிக்க வேண்டும் உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில், கமிட்டி உறுப்பினர்கள் முருகேசன், மதியழகன், சுப்பிரமணி, ராசப்பன், குப்புசாமி, பழனிசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

**கறவை மாடு, வெள்ளாடு வளர்ப்பு: பயிற்சி முகாம்**

குளித்தலை: கரூர் மாவட்டம், நச்சலூரில் நபார்டு வங்கி சிநேகிதி டிரஸ்ட் சார்பில், ஒருங்கிணைந்த முறையில் கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. நபார்டு உதவி பொது மேலாளர் பார்த்திபன் தலைமைவகித்தார். பயிற்சியில் ஆவின் கூட்டுறவு இயக்குநர் கேசவன், நச்சலூர், ஐ.ஓ.பி உதவி மேலாளர் ராஜேஸ் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஆவின் உதவி மேலாளர் மணிவண்ணன், அலுவலர்கள் முருகன், ராஜா ஆகியோர் கொண்ட குழுவினர், ஆவின்பால் பண்ணையில் பால் தரம் பிரித்தல், பதப்படுத்துதல், பால்பாக்கெட்டுகள் தயாரித்தல், சந்தைப்படுத்துதல், மதிப்பூட்டபட்ட பொருட்கள் முறையே ஆவின் நெய், பால் கோவா உட்பட பொரு ட்கள் தயாரித்தல் குறித்து பயிற்சி அளித்தனர்.

முகாமில் நச்சலூர் அரசு கால்நடை மருத்துவர் அரவிந்தன், (வேளாண்மை) நபார்டு உழவர் மன்ற நிர்வாகிகள், கண்ணதாசன், ஆனந்தராஜ், ரத்தினவேலு, ஆலத்தூர் முன்னோடி விவசாயி முத்து சிநேகிதி முதன்மை பயிற்றுநர்கள் வடிவேல், கோமளம், சத்யா, சித்ரா உட்பட பலர் பங்கேற்றனர்.

**வைகை அணையில் மாமரங்கள் ஏலம்**

ஆண்டிபட்டி:வைகை அணை வலது கரைப்பகுதியில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான மாமரங்களுக்கான ஏலம் நேற்று நடந்தது. வலது கரைப்பகுதியில் 136 மாமரங்கள் உள்ளன. அல்போன்சா, செந்தூரம், பங்கனப்பள்ளி, வகை மாமரங்களின் மகசூலுக்கான ஏலம் ஒவ்வொரு ஆண்டும் விடப்படும். இந்த ஆண்டுக்கான ஏலம், வலது கரைப்பிரிவு உதவிப்பொறியாளர் குபேந்திரன் தலைமையில் நேற்று நடந்தது. குறைந்தபட்ச கேட்புத்தொகை ரூ.2 லட்சத்து 21 ஆயிரமாக நிர்ணயம் செய்யப்பட்டது. பெரியகுளத்தை சேர்ந்த செல்லத்துரை என்பவர் ஓராண்டுக்கான மகசூலை ரூ.2 லட்சத்து 23 ஆயிரத்துக்கு ஏலம் எடுத்துள்ளார்.

## 2014ல் மிளகாய் வத்தல் விலை எப்படி இருக்கும் : வேளாண் வணிகத்துறை முன்னறிவிப்பு

விருதுநகர்: ""அடுத்தாண்டு மிளகாய் வத்தல் விலை<, எப்படி இருக்கும் என்பதை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வெளியிட்டுள்ளது. இதற்கேற்ப, விவசாயிகள் விதைப்பு, நடவு பணிகளை மேற்கொள்ளலாம்," எனவும், வேளாண் வணிக துணை இயக்குனர் முத்துமுனியாண்டி தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை:உலகளவில், மிளகாய் <உற்பத்தி நுகர்வில், இந்தியா முன்னிலை வகிக்கிறது. 2012-13ல், இந்தியாவில் 8 லட்சம் ஹெக்டேரில், 13 லட்சம் டன் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டது. இந்திய மிளகாய் உற்பத்தியில் தமிழகம் 1.77 சதவீதம் பங்களிக்கிறது. தமிழகத்தில், ராமநாதபுரம்(குண்டு) தூத்துக்குடி(குண்டு) சிவகங்கை(சம்பா) விருதுநகர்(சம்பா) திருநெல்வேலி(சம்பா மற்றும் குண்டு) ஆகியன, மிளகாய் சாகுபடி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழக மிளகாய்வத்தல் வரத்து, மார்ச்சில் துவங்கி, மே வரை இருக்கும். அனைத்து மாநிலங்கள், குறிப்பாக ஆந்திராவில் கையிருப்பில் உள்ள வத்தல் அளவு, உள்நாடு மற்றும் ஏற்றுமதிதேவை ஆகியன, மிளகாய் வத்தல் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளாகும். ஆண்டுதோறும், இந்திய உற்பத்தியில் 70 முதல் 80 சதவீத மிளகாய் உள்நாட்டு நுகர்விற்கும், 10 முதல் 20 சதவீதம் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, தமிழகத்தில் 2 லட்சம் மூடைகள்( ஒரு மூடை 35 கிலோ) இருப்பில் உள்ளன. தற்போது விருதுநகர் சந்தையில் குளிர்பதனத்தில் வைக்கப்பட்ட மிளகாய் வத்தல், குவிண்டாலுக்கு, 6,500 ரூபாய் முதல் 7,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அக்டோபர், நவம்பரில் மிளகாய் நாற்றங்கால் மற்றும் நேரடி விதைப்பு மூலம், சாகுபடி செய்யப்பட்டு, அடுத்த பிப்ரவரி மற்றும் மார்ச்சில் அறுவடை செய்யப்பட உள்ளது. இந்த நேரத்தில் சந்தைக்கு வரும் மிளகாய் வத்தல் விலையை அறிந்து கொள்ள, விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். இதை கருத்தில் கொண்டு தகவல் மையம், விருதுநகர் சந்தையில், கடந்த 16 ஆண்டுகளில் நிலவிய வத்தல் விலையை ஆய்வு செய்தது. ஆய்வுமுறைப்படி, அடுத்தாண்டு பிப்ரவரி, மார்ச்சில் குவிண்டாலுக்கு 5,500 ரூபாய் முதல் 6,000 ரூபாய் வரை இருக்கும் என, உறுதி செய்யப்படுகிறது.

இதை கருத்திற்கொண்டு, விவசாயிகள், மிளகாய் வத்தல் விதைப்பு, நடவு பணிகளை மேற்கொள்ளலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உளுந்து, பயறு விதை மானியத்தில் விற்பனை விவசாயிகள் பயன்பெறலாம்**

வலங்கைமான்: வலங்கைமான் பகுதி விவசாயிகள் வேளாண்மை விரி வாக்க மையங்களில் மானிய விலையில் உளுந்து, பயிறு விதை பெற்று அதிக மகசூல் பெறலாம் என்று வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் வட்டாரத்தில் நடப்பு பருவத்தில் சம்பா தாளடி 14 ஆயிரத்து 329 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு நிலவும் பருவ நிலையை கருத்தில் கொண்டு வலங்கைமான் வட்டாரத்தில் உளுந்து பயிறு சாகுபடி பரப்பும் மற்றும் உற்பத்தியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நெல் தரிசில் உளுந்து பாசிப்பயிறு ஆகியவற்றை விதைக்க சரியான பருவம் ஜனவரி 2ம் வாரம் முதல் பிப்ரவரி முதல் வாரம் வரையாகும். உயர் ந்த விளைச்சலுக்கு முக்கிய காரணியாக விளங்கும் உளுந்து, பயறு ஆகிய வற்றின் விதைகள் வலங்கைமான் வட்டாரத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவா க்க மையங்களிலும் தேவை யான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் உளுந்து, பயறு விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு மானியமாக ரூ. 24 வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு தேவையான 10 கிலோ விதையை நெல் அறுவடைக்கும் முன் 10 நாட்களுக்கு முன்பு விதைக்க வேண்டும். அறுவடை இயந்திரம் மூலம் அறுவடை செய்யும் விவசாயிகள் அறுவடைக்கு முன்பு 4 நாட்களுக்குள் ஏக்கருக்கு 12 கிலோ விதை யை விதைக்க வேண்டும்.

மேலும் உளுந்து, பயறு ஆகியவற்றின் ஊக்கும் திறன், பூக்கள் உதிராமை, திரட்சியான மணிகள் ஆகிவற்றை அதிகரிக்க செய்யும் பயறு நுண்ணூட்டம் தேசிய உணவு பாது காப்பு திட்டத்தின் கீழ் 50 சதவீத மான்யத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.  ஆகவே விவசாயிகள் தங்களது பகுதி உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு மான்ய விலையில் உளுந்து, பயறு விதை மற்றும் பயறு நுண்ணூட்டம் பெற்று அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

**மேட்டூர் நீர்மட்டம் 71 அடியானது**



மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் 72.63 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 71.85 அடியாக சரிந்தது. அணைக்கு வினாடிக்கு 1,528 கனஅடி வீதம் நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 9,410 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர் இருப்பு 34.30 டி.எம்.சி.

**மீத்தேன் திட்ட தொழிலாளர்களை தடுத்து விவசாயிகள் முற்றுகை**

திருவிடைமருதூர் : திருவிடைமருதூர் அருகே மீத்தேன் திட்டப்பணியில் ஈடுபட்ட தொழிலாளர்களை தடுத்து நிறுத்தி விவசாயிகள் முற்றுகையில் ஈடுபட்டனர். தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் தற்போது விளை நிலங்களை கையகப்படுத்தி மீத்தேன் மற்றும் நிலக்கரி எடுப்பதற்கான முதற்கட்ட ஆய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. மீத்தேன் எடுக்கும் பணியை தடுத்து நிறுத்த வேண்டும் என வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.இந்நிலையில், தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூரை

அடுத்த நரசிங்கன்பேட்டையில் மீத்தேன் திட்டத்திற்காக சுமார் 10 ஏக்கர் விவசாய நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. அந்த நிலத்தில் நேற்று ராட்சத இயந்திரங்களை கொண்டு துளையிடும் பணியை துவக்கினர். இதில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டனர். இதனையறிந்து, ஏராளமான விவசாயிகள் ஒன்று திரண்டு வந்து மீத்தேன் திட்ட பணிக்காக வந்திருந்த தொழிலாளர்களை தடுத்து நிறுத்தி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கிடையே நம்மாழ்வார் தலைமையில் 300க்கும் மேற்பட்டவர்கள் அங்கு திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.தகவல் அறிந்து தாசில் தார் மற்றும் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுநடத்தி, 'தற்போது பணிகள் எதுவும் நடைபெறாது' என்று கூறியதால் போராட்டத்தை கைவிட்டு அனை வரும் கலைந்து சென்றனர். பின்னர் மீத்தேன் திட்டப்பணிக்காக வந்த தொழிலாளர்களை போலீசார் அழைத்து சென்று பாதுகாப்பாக தங்க ஏற்பாடு செய்தனர்.மீத்தேன் திட்ட தொழி லாளர்களை விவசாயிகள் முற்றுகையிட்டது பர பரப்பை ஏற்படுத்தியது.

**அமெரிக்காவில் கடும் பனிப்புயல் : 5 லட்சம் பேர் இருளில் தவிப்பு**



அகஸ்டா: அமெரிக்கா மற்றும் கனடாவில் கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. இதனால் மின்சாரம் தடைபட்டு 5 லட்சம் பேர் இருளில் தவிக்கின்றனர். குளிர் காரணமாக இதுவரை 24 பேர் இறந்துள்ளனர். அமெரிக்காவின் மத்திய, வடகிழக்கு பகுதிகளிலும் கனடாவின் கிழக்கு பகுதியிலும் கடுமையான பனிப்புயல் வீசி வருகிறது. மைனஸ் 15 டிகிரி

அளவுக்கு இங்கு வெப்பநிலை உள்ளது. இதனால், எங்கு பார்த்தாலும் வெண்கம்பளி போர்த்தியது போன்று, பனிப்படலம் காணப்படுகிறது. தொடர் பனிப்புயல் காரணமாக, மின்கம்பிகள் இறுகி அறுபட ஆரம்பித்துள்ளன. இதனால் பல பகுதிகள் இருளில் மூழ்கி உள்ளன. இதனால் 5 லட்சம் பேர் வரை இருளில் தவித்து வருகின்றனர். இரு நாடுகளிலும் மின்துறை ஊழியர்கள் இரவு, பகலாக அறுந்த மின்கம்பிகளையும், பழுதடைந்த டிரான்ஸ்பார்மர்களையும் சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பனிப்புயலால், குடிநீர் வினியோகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஏரிகளில் தண்ணீர் உறைந்து பனிக்கட்டியாக மாறிவிட்டது. மின்சாரம் இல்லாமல், தண்ணீரும் கிடைக்காமல் பொதுமக்கள் கடுமையாக அவதிப்பட்டு வருகின்றனர். வரும் ஓரிரு நாட்களுக்கு இந்த பனிப்புயல் தொடரும் என்றும், இப்போதைக்கு அதன் தாக்கம் குறைய வாய்ப்பில்லை என்றும் அமெரிக்காவின் தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, குளிரில் இருந்து தாக்குப்பிடிப்பதற்காக இயக்கப்படும் கருவிகளில் இருந்து கார்பன் மோனாக்சைடு வாயு வெளியாகி கனடாவில் 7 பேர் இறந்துள்ளனர். இதேபோல், அமெரிக்காவில் 17 பேர் இறந்துள்ளனர். குளிரை தாக்குப்பிடிப்பதற்காக பொதுமக்கள் கேஸ், ஜெனரேட்டர் மூலம் இயங்கும் வெப்பநிலை கருவிகளை பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை இயக்கும்போது, சில இடங்களில் புகை வெளியேறாமல் அதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது. குளிரை தாக்குப்பிடிப்பதற்காக, தீயை உருவாக்கும் எந்த கருவியையும் வீட்டில் பயன்படுத்த வேண்டாம் என்று தீயணைப்பு துறை அதிகாரிகள் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். மெழுகுவர்த்திகளை கூட மொத்தமாக வைத்து எரிக்க வேண்டாம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### 4,500 ஏக்கரில் பயிரிட்டுள்ள நெல்லுக்கு தண்ணீர் வேண்டும்

திருப்பூர்: 4500 ஏக்கரில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்களைக் காப்பாற்ற இன்னும் ஒரு முறை தண்ணீர் வழங்க வேண்டும் என்று கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். திருப்பூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். வேளாண் இணை இயக்குநர் ஷெரீப், மாவட்ட வருவாய் அலுவலர் பாரிவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் அனைத்து துறை அலுவலர்கள், பாசன சங்கத் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். கடந்த கூட்டத்தில் பெறப்பட்ட மனு மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அதிகாரிகள் விளக்கமளித்தனர். விவசாய சங்கப் பிரதிநிதிகள் சார்பில் ஈஸ்வரமுர்த்தி(உழவர் உழைப்பா ளர் கட்சி): பழைய அமராவதி ஆயக்கட்டு பாசனத்துக்கு இன்னும் ஒரு தண்ணீர் திறந்து விட வேண்டும். தற்போது அமராவதி அணையில் நீர் இருப்பு 32 அடியாக உள்ளது. அதில் குடிநீர் போக மீதி 17 அடி தண்ணர் உள்ளது. தற்போது 4500 ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது. நாளை முதல் 2ம் சுற்று தண்ணீர் நிறுத்தப்பட்டு விடும். 4500 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்களை காப்பாற்ற இன் னும் ஒரு தண்ணீர் வேண்டும். தண்ணர் கிடைக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தாராபுரத்தில் மின்இணைப்பு பெயர் மாற்ற முகாம் நடத்த வேண்டும். இப்பகுதியில் உள்ள 50 சதவீத விவசாயிகள் மின்இணைப்பை பெயர் மாற்றாமல் உள்ளனர். ஆகவே மின்இணைப்பு பெயர் மாற்ற முகாம் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். கோபால்(பி.ஏ.பி): மின்சாரம் சீராக வினியோகம் செய்ய வேண்டும். பாலில் கலப்படம் செய்வதைத் தடுக்க வேண்டும். அதற்கு சுகாதாரத் துறை முலம் சோதனை நடத்த வேண்டும். மலரவன்: உடுமலை, குண்டடம், மடத்துக்குளம் உள்ளிட்ட ஒன்றியங்களில் அதிகளவில் குட்டைகள் உள்ளது. அதை துூர்வார நடவடிக்கை எடுக்க வேண் டும். துரைசாமி: உடுமலை எரிசனம்பட்டி சாலையில் இருந்து தளி செல்லும் சாலை பழுதடைந்துள்ளது. 10 வருடங்களாக இந்த சாலையை செப்பனிட வேண்டும் என்று கோரி வந்துள்ளோம். தினசரி இந்த

சாலையில் 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் செல்கின்றன. சாலைகள் அகலம் குறுகலாக உள்ளது. வாகனத்தில் செல்வோர் மிகவும் சிரமப்படுகின்றனர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும்**

புதுச்சேரி: புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தலைவர் ஏம்பலம் செல்வம், செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை:தீவன விலை உயர்வு, கால்நடை பராமரிப்பு செலவு அதிகரித்து வருவ தால் பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பு சார்பில் பலமுறை புதுவை அரசை வலியுறுத்தியுள்ளோம். எனினும் இதுவரை உயர்த்தவில்லை. இந்நிலையில் தமிழக அரசு பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ. 20 லிருந்து ரூ. 23 ஆக உயர்த்தி அறிவித்துள்ளது. இதனால் புதுவை மாநிலத்திற்கு பால்வரத்து குறையும் சூழல் உருவாகும். எனவே புதுவை அரசு பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ. 25 என உயர்த்தி அறிவிக்க வேண்டும். முந்தைய காலங்களில் தமிழகத்தை விட புதுவை யில் தான் பால் கொள்முதல் விலை அதிகமாக இருக்கும். இதனால் புதுவைக்கு பால் வரத்து போதுமானதாக இருந்தது. தற்போது பாண்லே நிறுவனம் புதுவை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலை முழுமையாக கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் தமிழகம் உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து தரமில்லாத பாலை லிட்டருக்கு ரூ.25 என அதிக விலை கொடுத்து கொள்முதல் செய்கிறது. ஆனால் பாண்லே நிறுவனம் நமது உள்ளூர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து லிட்டருக்கு ரூ.19 என கொள்முதல் செய்கிறது. இவ்வாறு பாரபட்சம் காட்டுவதால் புதுவையில் 1 லட்சம் லிட்டராக இருந்த பால் உற்பத்தி தற்போது 25ஆயிரம் லிட்டராக குறைந்துள்ளது. பால் உற்பத்தியை ஊக்குவிக்க மானிய தீவனத்தை 150 கிலோ உயர்த்தி வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று மஞ்சளாறு அணையில் இருந்து முதல்போக சாகுபடிக்காக இன்று தண்ணீர் திறப்பு ஜெயலலிதா உத்தரவு**



சென்னை,

விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, மஞ்சளாறு அணையில் இருந்து முதல்போக சாகுபடி பாசனத்திற்காக இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தண்ணீர் திறந்துவிட முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மஞ்சளாறு அணை திறப்பு

தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி, வேளாண் பெருங்குடிமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடி பாசனத்திற்காக 27–ந்தேதி (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

பாசன வசதி பெறும்

இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள சுமார் 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

**ரபி பயிர்கள் சாகுபடி பரப்பளவு 5.36 கோடி ஹெக்டேரை தாண்டியது**



புதுடெல்லி

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) டிசம்பர் 20–ந் தேதி நிலவரப்படி பயிரிடும் பரப்பளவு 5.36 கோடி ஹெக்டேரை தாண்டியுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 5.07 கோடி ஹெக்டேராக இருந்தது.

நெல்

பருவமழை நன்றாக இருந்ததால் ரபி பருவத்தில் இதுவரை நெல் பயிரிடும் பரப்பளவு 2.14 லட்சம் ஹெக்டேராக விரிவடைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.74 லட்சம் ஹெக்டேராக இருந்தது. பருப்பு பயிரிடும் பரப்பளவு 1.27 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 1.21 கோடி ஹெக்டேராக இருந்தது.

சிறு தானியங்கள் சாகுபடி பரப்பளவு 54.81 லட்சம் ஹெக்டேரிலிருந்து 53.92 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பரப்பளவு 79.50 லட்சம் ஹெக்டேராக விரிந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 76.30 லட்சம் ஹெக்டேராக இருந்தது.

ரபி பருவத்தின் பிரதான பயிரான கோதுமை சாகுபடி பரப்பளவு 8 சதவீதம் அதிகரித்து 2.74 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 2.53 கோடி ஹெக்டேராக இருந்தது.

நடப்பு பருவத்தில் (2013 ஜூலை – 2014 ஜூன்) உணவு தானியங்கள் உற்பத்தி முந்தைய சாதனை அளவை விஞ்சும் என மத்திய விவசாய துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார். 2011–12 பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 25.93 கோடி டன்னாக இருந்தது.

<u>இலக்கு</u>

நடப்பு ரபி பருவத்தில் 9.25 கோடி டன் கோதுமை, 1.20 கோடி டன் பருப்பு, 1.40 கோடி டன் அரிசி, 44 லட்சம் டன் மக்காச்சோளம் மற்றும் 15 லட்சம் டன் பார்லி உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. ரபி பருவத்தில் கோதுமை, எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள் ஆகியவை பிரதானமாக சாகுபடி செய்யப்படுகின்றன.

**நடப்பு 2013–14 பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி கணிசமாக அதிகரிக்க வாய்ப்பு**



நடப்பு 2013–14 பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) தாவர எண்ணெய் இறக்குமதி 4 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்து வரலாறு காணாத அளவிற்கு 1.11 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெய் அதிகளவில் இறக்குமதி செய்வதே இதற்கு காரணம் என ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

நவம்பர் மாதத்தில் சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி 153 சதவீதம் அதிகரித்துள்ளது. சுத்திகரிக்கப்படாத சூரியகாந்தி எண்ணெய்க்கும், சுத்திகரிக்கப்பட்ட பாமாயிலுக்கும் இடையிலான விலை வித்தியாசம் டன் ஒன்றுக்கு 380 டாலரிலிருந்து 115 டாலராக குறைந்துள்ளதே இதற்கு காரணமாகும்.

சர்வதேச அளவில் சமையல் எண்ணெய் இறக்குமதியில் இந்தியா முன்னணியில் உள்ளது. மொத்த சமையல் எண்ணெய் தேவையில் பாதிக்கும் மேல் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. இந்தோனேஷியா மற்றும் மலேசியாவில் இருந்து பாமாயிலும், அர்ஜென்டினா மற்றும் பிரேசிலில் இருந்து சோயா எண்ணெயும், சூரியகாந்தி எண்ணெய் உக்ரைனில் இருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. சூரியகாந்தி எண்ணெயை இறக்குமதி 23 சதவீதம் அதிகரித்து 12 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### அட்மா திட்டம் நிலக்கடலை சாகுபடி குறித்த விவசாயிகளுக்கு பயிற்சி



சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டாரம் கூ.குட்டப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் கால்நடை கோமாரி நோய் தடுப்பு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடநதது. இந்த பயிற்சியில், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜேந்திரன் அனைவரையும் வரவேற்றார். காடையாம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் நாசர் தலைமை தாங்கி நிலக்கடலை உயிர் உரங்களின் பங்கு குறித்து பேசினார்.

வேளாண்மை அலுவலர் சம்பத்குமார் நிலக்கடலை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். கால்நடை உதவி மருத்துவர் நவின்குமரவேல் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் குறித்தும் அதன் தடுப்பு குறித்தும் விளக்கினார். பட்டுவளர்ச்சிதுறை உதவிஆய்வாளர் வெங்கடாசலம், தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டு பேசினர்கள். இதில் 50 விவசாயிகள் கலந்து கொண்டார்கள். இதற்கான ஏற்பாடுகளை அட்மா தொழில் நுட்ப வல்லுநர்கள் சிவக்குமார், பழனியப்பன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 15 காசுகள் குறைந்தது 365 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 380 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 365 காசுகளாக குறைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டையின் விலையில் மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல நாமக்கல் மண்டலத்திலும் முட்டையின் விலையில் சற்று மாற்றம் செய்யப்பட்டு உள்ளது என்று பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–400, ஐதராபாத்–391, விஜயவாடா, தனுகு–389, பார்வாலா–391, மும்பை–429, மைசூர்–390, பெங்களூர்–390, கொல்கத்தா–440, டெல்லி–420.

**கோழிப்பண்ணையாளர்கள் தீவன அளவை கட்டுப்படுத்தி முட்டை உடைவை தவிர்க்கலாம் ஆராய்ச்சி நிலையம் தகவல்**

நாமக்கல்,

கோழிப்பண்ணையாளர் கள் தீவன அளவை கட்டுப்படுத்துவதால் முட்டையின் உடைவை தவிர்க்கலாம் என்று நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

<u>ஆராய்ச்சி நிலையம்</u>

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும் (வியாழக்கிழமை), நாளையும் (வெள்ளிக்கிழமை) அடுத்த 2 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

இன்றும், நாளையும் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் அடுத்த 2 நாட்களுக்கு முறையே 3, 3 கி.மீ. வேகத்தில் இருக்கும். தென் கிழக்கு திசையில் இருந்து வீசும்.

வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 86 டிகிரியாகவும், குறைந்தபட் சமாக 64.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 70, 71 சதவீதமாகவும், குறைந்தபட் சமாக முறையே 42, 44 சதவீதமாகவும் இருக்கும்.

<u>சிறப்பு வானிலை</u>

இன்றும், நாளையும் நாமக்கல் மாவட்ட வானி லையில் வானம் லேசான மேகமூட்டத்துடன் மழை யற்று காணப்படும். அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்ப நிலை அளவுகள் முறையே 86 டிகிரி மற்றும் 64.4 டிகிரியாக நிலவும்.

காற்றின் வேகம் பெரும்பாலும் 3 - 4 கிலோ மீட்டர் என்ற அளவில் பெரும்பாலும் தென் கிழக்கில் இருந்து வீசும். ஈரப்பதம் 42 - 71 சதவீதமாக நிலவும்.

அடுத்த 2 நாட்களுக்கான வானிலையில் இரவு வெப்பம் 64.4 டிகிரிக்கும் குறைவாகவே நிலவும் என்பதால் கோழிகளுக்கான தீவனத்தில் அதிகபட்ச எரிசக்தியும் (2600 கிலோ கலோரி வரையில்) அதற்கேற்றார்போல் புரதத் தின் அளவை குறைத்தும் தரலாம். தீவன அளவை கட்டுப்படுத்துவதால் முட்டை யின் உடைவை தவிர்த்து, அதனால் அதிக முட்டை உடைவையும் தவிர்க்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**மானிய விலையில் உரம் வழங்க வேண்டும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தல்**

திருவாரூர்,

மானிய விலையில் உரம் வழங்க வேண்டும் என திருவாரூரில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் நடராசன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:–

சத்தியநாராயணன்:– நடப்பு சம்பா சாகுபடியில் நெல்லுக்கு கூடுதலான அளவில் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். மானிய விலையில் உரம் வழங்க வேண்டும். விவசாயிகள் சாகுபடியில் பாதிப்பு ஏற்படும் போது மத்திய அரசின் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் இழப்பீடு பெற்று பயன்பெற்று வந்தனர். தற்போது இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு உள்ளது. எனவே விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் மத்திய அரசின் புதிய காப்பீட்டுத்திட்டத்தை தமிழக அரசு எதிர்க்க வேண்டும்.

பழனிவேல்:– பருத்தி சாகுபடியில் வேளாண்மைதுறை தனி கவனம் செலுத்த வேண்டும். விவசாயிகளுக்கு விதை, மானியம் உள்ளிட்டவைகளைக் கொடுக்க வேண்டும்.

## நெல்கொள்முதல்

சுந்தரமூர்த்தி:– திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோயால் உயிரிழந்த சுமார் 1,500–க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

ராஜதுரை:– விவசாயிகளுக்கு தேவையான அளவு மின்சாரத்தை பெற்றுத்தர வேண்டும்.

கோதண்டராமன்:– எடமேடு பகுதிகளிலுள்ள ஏரிகளில் மண் எடுத்து விவசாய நிலத்தில் போட்டுக்கொள்ள மாவட்ட நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டும். மேலும் இப்பகுதியில் இன்னும் 15 நாள்களுக்கு முறை வைக்காமல் தண்ணீர் விட வேண்டும்.

விவசாயிகளின் கருத்துகளுக்கு பிறகு கூட்டத்தில் கலெக்டர் நடராசன் கூறுகையில், விதை நெல்லை விவசாயிகளே தயாரித்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் விரும்பினால் மாவட்டத்தில் பசுந்தாள் உரம் தெளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். திருவாரூர் மாவட்டத்தில் 252 நெல் கொள்முதல் நிலையங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் சன்னரகம் 18,481 மெட்ரிக் டன்னும், பொதுரகம் 272 மெட்ரிக் டன்னும் சேர்த்து மொத்தம் 18,753 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## கலந்து கொண்டவர்கள்

கூட்டத்தில் நீர், மண் மேலாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சசிகுமார், நெல் தரிசு பயிர்களில் உற்பத்தி திறன் அதிகப்படுத்தும் தொழில்

நுட்பங்கள் குறித்தும், நெல் பயிரில் எந்திர அறுவடை பயன்படுத்துவது மற்றும் உளுந்து விதைப்பு, உர மேலாண்மை குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மணிமாறன், நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, வேளாண்மை இயக்குநர் தனசேகரன், துணை இயக்குநர் மயில்வாகணன், கூட்டுறவு சங்கங்கள் இணை பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் சோழன், மாவட்ட கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வராஜு மற்றும் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**கடலூர் பண்ருட்டி பகுதியில் மஞ்சள் பயிர் அமோக விளைச்சல் விவசாயிகள் மகிழ்ச்சி**



பண்ருட்டி, -

பண்ருட்டி பகுதியில் மஞ்சள் பயிர் விளைச்சல் அமோகமாக இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>பொங்கல் பண்டிகை</u>

பண்ருட்டி அருகே திருவதிகை, கண்டரக்கோட்டை, ராசாப்பாளையம் உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை

முன்னிட்டு அதிகளவில் மஞ்சள் பயிரிட்டு வருகின்றனர். தற்போது, பொங்கல் பண்டிகை நெருங்குவதை முன்னிட்டு மஞ்சள் பயிர் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளனர்.

பண்ருட்டி பகுதியில் பரவலாக பெய்த பருவ மழையின் காரணமாக மஞ்சள் பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்திருந்தது. ஆனால், திடீரென நோய் தாக்குதல் ஏற்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்தனர். பின்னர் வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் மஞ்சள் பயிரை காப்பாற்றினார்கள். இதையடுத்து, தற்போது, மஞ்சள் பயிர் நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

கூடுதல் விலை விற்றால் லாபம்

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், ஆண்டுதோறும் மஞ்சள் பயிருக்கு கடும் கிராக்கி இருக்கும். அதனை கருத்தில் கொண்டே தொடர்ந்து பல ஆண்டுகளாக பொங்கலையொட்டி அறுவடை செய்வதற்காக மஞ்சளை பயிர் செய்து வருகிறோம். எனினும் நடப்பாண்டில் மஞ்சள் பயிரினை பயிரிட்டு அதனை பராமரிப்பதில் என்னை போன்று அனைத்து விவசாயிகளுக்கும் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. எனவே, கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் மஞ்சள் கூடுதல் விலைக்கு விற்றால் மட்டுமே எங்களுக்கு ஓரளவுக்கு லாபம் கிடைக்கும். என்றார்.

**கடலூர் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 விலை நிர்ணயம் பா.ம.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்**

கடலூர், -

விவசாயிகளின் நலன் கருதி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என பா.ம.க. நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## செயற்குழு கூட்டம்

கடலூர் அருகே குள்ளஞ்சாவடியில் பா.ம.க. நிர்வாகிகளின் ஒருங்கிணைந்த மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இதற்கு மாநில துணை பொதுச்செயலாளர் பழ.தாமரைக்கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் தர்மலிங்கம் முன்னிலை வகித்தார். மாநில இணை பொதுச்செயலாளர் இசக்கி, மாநில சொத்து பாதுகாப்பு குழு தலைவர் டாக்டர் கோவிந்தசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் விவரம் வருமாறு:–

## மகளிர் சங்க மாநாடு

*கடலூரில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள தொழிற்சாலைகளை மூட வேண்டும். *கடலூர் நகராட்சியில் வரிவசூல், வாகனங்கள் வாங்குதல், ஒப்பந்தங்கள் வழங்கியதில் நடந்த ஊழல் குறித்து சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்குழு அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். *கடலூர் பாராளுமன்ற தொகுதியில் உள்ள சட்டமன்ற தொகுதி வாரியாக மகளிர் சங்க மாநாடு நடத்த வேண்டும். *விவசாயிகளின் நலன்கருதி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். *கடலூர் மாவட்ட வன்னியர் சங்க அலுவலகம் சுகாதார அலுவலகமாக மாற்றப்படுவதை கண்டிக்கிறோம்.

என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில், மாநில துணை தலைவர் முத்து வைத்திலிங்கம், மாவட்ட தலைவர் வேங்கைசேகர், மாநில மகளிரணி செயலாளர் சிலம்புசெல்வி, மாநில மாணவரணி செயலாளர் கோபிநாத், மாநில இளைஞரணி துணைச்செயலாளர் முத்துகிருஷ்ணன், மாவட்ட வன்னியர் சங்க செயலாளர் ஆறுமுகம் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில், ஒன்றிய துணைச்செயலாளர் கோகுலகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**‘மேலூர் கரும்பின் தித்திப்பு அபாரம்’ இங்கிலாந்து சுற்றுலா பயணிகள் சுவைத்துத்தின்றனர்**



மேலூர்,

“மேலூர் கரும்பின் தித்திப்பு அபாரமாக உள்ளது” என்று, இங்கிலாந்து சுற்றுலா பயணிகள் தெரிவித்தனர்.

**வண்டல் மண்**

பெரியாறு– வைகை அணைகளின் ஒரு போக பாசனப்பகுதியான மேலூர் சுற்று வட்டாரத்தில் படிந்துள்ள வண்டல் மண் கரும்பு பயிருக்கு உகந்ததாக உள்ளது.

இங்கு விளைச்சலாகும் பொங்கல் கரும்பு உயரமாவும், தடிமனாகவும் உள்ளதோடு அதிக இனிப்பாகவும் இருக்கிறது. சுவைமிக்க மேலூர் பகுதி கரும்பு தமிழ்நாடு மட்டுமல்லாது வட மாநிலங்களுக்கும் லாரிகளில் ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான கரும்பு விற்பனை மேலூர் பகுதியில் தீவிரமடைந்துள்ளது. வட மாநிலங்களில் மகரசங்கராந்தி(பொங்கல்) விழாவிற்கு கரும்புகளை வாங்குவதற்கு வியாபாரிகள் வந்துள்ளனர்.

<u>விற்பனை விறுவிறுப்பு</u>

மும்பை, டெல்லி, கொல்கத்தா ஆகிய நகரங்களில் இருந்து வந்து அதிக அளவில் கரும்பு வாங்கிச் செல்கின்றனர். 20 கட்டு கரும்புகள் ரூ.4 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை கரும்புகளின் தரத்திற்கு ஏற்றவாறு விற்பனையாகின்றன. சிறிய லாரிகளில் 300 கரும்புக்கட்டுகளும், பெரிய லாரிகளில் 400 கரும்புக்கட்டுகளும் ஏற்றப்படுகின்றன. கட்டு ஒன்றில் 15 கரும்புகள் இருக்கும். தேசிய நெடுஞ்சாலை வழியாக வட மாநிலங்களுக்கு 4 நாட்களுக்குள் இவை சென்றடைகின்றன.

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பொங்கல் கரும்புகள் மேலூர் பகுதியில் அதிக அளவில் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ளன. பல்லவராயன்பட்டி, சுக்காம் பட்டி உள்பட பல பகுதிகளில் பொங்கல் கரும்புகள் பயிராகி உள்ளன.

கடந்த ஆண்டு 20 கட்டுகள் ரூ.3,500 வரை விற்பனையாயின. இந்த ஆண்டு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை விற்பனையாகின்றன. கரும்பு கொள்முதல் செய்வதற்கு வியாபாரிகள் இனிமேல் அதிக அளவில் வருவார்கள். இன்னும் சில நாட்களில் கரும்பு விற்பனை இன்னும் தீவிரமடையும் என்று கரும்பு விவசாயிகள் தெரிவித்தனர்.

<u>அபார தித்திப்பு</u>

இந்நிலையில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் சிலர் மேலூர் பகுதியில் கரும்பு வயலை சுற்றிப்பார்த்தனர்.

அவர்களுக்கு கரும்பு கொடுக்கப்பட்டது. அதை சுவைத்துத்தின்ற அவர்கள், ‘‘அடேயப்பா இப்படி ஒரு தித்திப்பா?’’ என்று வியந்து பாரட்டினர்.

**சூரை மீன்பிடிப்புக்கு ஏதுவாக புதிய விசைப்படகுகள் கட்ட 50 சதவீதம் மானியம் கலெக்டர் நந்தகுமார் தகவல்**

ராமநாதபுரம்,

சூரை மீன்பிடிப்புக்கு ஏதுவாக புதிய விசைப் படகுகள் கட்டுவதற்கு 50 சதவீதம் மானியம் அளிக்கப்பட உள்ளதாக கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

<u>மானியம்</u>

அண்மைக்கடல் பகுதியில் அதிகரித்து வரும் மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், ஆழ்கடல் பகுதியில் செறிந் துள்ள மீன்வள ஆதாரங்களை நீண்ட காலம் பயன்படுத்திட வும், தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினை கட் டும் மீனவர்களுக்கு தமிழக அரசு புதிய திட்டத்தை அறி வித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு மற்றும் செவுள் வலை பயன்படுத்தும் புதிய மீன்பிடி விசைப்படகினை தயார் செய்ய ஆகும் செலவில் 50 சதவீதம் அல்லது ரூ.30 லட் சம் வரை மானியமாக வழங் கப்படும்.

தமிழகத்தை சேர்ந்த முழு நேர மீன்பிடி தொழிலில் ஈடுப டும் மீனவர்கள் அதிகபட்சம் 6 பேர் கொண்ட குழுவாகவோ, அல்லது மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனி நபரா கவோ இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம். இத்திட்டத் தின் கீழ் பயன்பெற விண்ணப் பிக்க விரும்புவோர் விண் ணப்ப படிவங்களை மீன்வளத் துறையின் ஷ்ஷ்ஷ்.யீவீ□லீமீக்ஷீவீமீூ .□ஸீ.ரீஷீஸ்.வீஸீ என்ற இணைய தளத்தில் கட்டணமின்றி பதி விறக்கம் செய்து கொள்ள லாம். அல்லது விண்ணப்ப படிவங்களை மண்டல மீன் துறை துணை, இணை இயக் குனர்கள், கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குனர் கள் அலுவலகங்கள் வேலை நாட்களில் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

<u>விண்ணப்பங்கள்</u>

விண்ணப்பதாரர் மீன்துறை இணைய தளத்தில் உள்ள விரிவான வழிகாட்டு நெறி முறைகளின்படி பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மீன்துறை இயக்குனர், நிர்வாக அலுவலக கட்டிடங்கள், டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை, சென்னை-6 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலமாவோ, அல்லது நேரடியாகவோ வரு கிற பிப்ரவரி 10-ந்தேதிக்குள் விண்ணப் பத்தை அனுப்பி வைக்க வேண்டும். பெறப் பட்ட விண்ணப்பங்களுக்கு மாநில அளவிலான பதிவு எண்ணுடன் கூடிய ஒப்புகை சீட்டு விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படும்.

மேலும் இத்திட்டம் தொடர் பான கூடுதல் விவரங்கள் மற் றும் விளக்க உரைகளுக்கு சம் பந்தப்பட்ட மாவட்ட மீன் துறை உதவி இயக்குனர் அல் லது மண்டல மீன்துறை துணை, இணை இயக்குனர் அலுவலகங்களை நேரிலோ, தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மஞ்சளாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவு

தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து முதல்போக சாகுபடிக்காக நாளை முதல் (டிச.27) தண்ணீர் திறந்துவிட தமிழக முதல்வர் ஜெயல்லிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்: தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, விவசாயிகளிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடி பாசனத்திற்காக 27.12.2013 முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன்.

இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள சுமார் 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.